

DUPLICATE

புதினப்பத்திரிகையாகப்
பதிவுசெய்யப்பெற்றது.

இந்துசாதனம்

விரோதிஞ (1889)
ஆவணிமீ ௨௨
ஆரம்பமானது.

THE HINDU ORGAN.

சோமவாரத்திலும் குருவாரத்திலும் பிரசுரமாகும்.

"எனைத்தானு நல்லவை கேட்க வனைத்தானு, மான்ற பெருமை தரும்."

பத்திரக் கிரயம்.

யாழ்ப்பாணப் பட்டினம்:	ஞ 1-க்கு	ரூ. 5-60
வெளியூர், இந்தியா:	,,	ரூ. 9-40
தொடுவாய்ப்பகுதி:	,,	ரூ. 9-40
தனிப்பிரதி:		சதம் 6

முற்பணம் அனுப்புவோருக்கே பத்திரிகை அனுப்பப்படும்.

விளம்பர விகிதம்.

முதன்முறைக்கு:—	ஒருகலம்	ரூ. 9-40
,,	அரைக்கலம்	ரூ. 5-00
,,	காற்கலம்	ரூ. 3-15
,,	ஒரு அங்குலம்	சதம் 65

அடுத்த முறைகட்கு டை விகிதங்களிற் பாதி. விளம்பரங்கள் முற்பண மனுப்பினலன்றிக் கவனிக்கப்படா.

புத்தகம்—௩௫. } யாழ்ப்பாணம்:—ருதிரோற்காரிஞ புரட்டாதிமீ ௨௫௨ (க௯௨௩ அக்டோபர் கக) வியாழக்கிழமை. } இலக்கம்—௨அ.

உ

கணபதி துணை.

சீர்பூத்த கருவிநா வணர்ச்சி தேங்கச்
சிவம்பூத்த நிகமாக மங்க ளோங்கப்
பார்பூத்த புறச்சமய விருள்க ணீங்கப்
பரம்பூத்த சைவநிலை பாரோர் தாங்கப்
பேர்பூத்த சிவானந்தத் தினிது தூங்கப்
பிறைபூத்த சடைமவுலிப் பிரானுர் தந்த
வார்பூத்த வறிவிச்சை தொழிலென் றோது
மதம்பூத்தவிநாயகன்ருள்வணங்கிவாழ்வாம்.

வாழ்க வந்தணர் வானவ ரானினம்
வீழ்க தண்புனல் வேந்தனு மோங்குக
ஆழ்க தீயதெல் லாமர னாமமே
சூழ்க வையக முந்துயர் தீர்கவே.

ஸ்ரான்டேர்ட் கொளுக்கியோடுகள்.

(Standard Tiles.)

இவை வேரூக் என்னுமிடத்திலுள்ள ஸ்ரான்டேர்ட் ஓட்டுக் கம்பனியாரால் செய்யப்படுவன.

இவ்வோடுகள் இக்காலத்திலுள்ள மற்றைய ஓடுகளைக்காட்டிலும் திறமானவையும் மலிவானவையும் இலேசானவையும் நீடித்தகாலத்திற்கு நின்று பிடிக்கத்தக்கனவுமாகும். இந்த ஓடுகளே இலங்கையிலும் இந்தியாவிலும் இக்காலத்தில் அதிகமாக உபயோகிக்கப் படுகின்றன. இவைகள் (வேயப்பட்ட வீட்டுள் வசிப்போருக்கு) குளிர்மையையும் தேகாரோக்கியத்தையும் கொடுக்கத்தக்கனவாயும் எவ்விஷயத்திலும், ஏனையஓடுகளிலுஞ் சிறந்தனவாயுமிருக்கின்றன. யாழ்ப்பாணத்துள்ள சிறந்த கல்லாரிகளுக்கு இவ்வோடே உபயோகிக்கப் பட்டுள்ளன மற்றும் ஓடுகளை வாங்குதற்கு முன் இதனையும் ஒருமுறை பரீட்சித்துப் பாருங்கள். விரும்புவோர் யாழ்ப்பாணத்திலேனும் வல்வெட்டித்துறையிலேனும் பருத்தித்துறையிலேனும் S. வீரகத்திப்பிள்ளையிடம் பெற்றுக்கொள்ளலாம்.

(H. 18.)

அநேக பரிசு நற்சாக்ஷிகளும் பெற்ற மருந்துகள்.

இழந்துபோன பலத்தை

ஒரு குளிகை சாப்பிட்ட 6 மணி நேரத்தில் கொடுக்கும்!!

ஜீவரத்ன எலக்ட்ரிக் மாத்திரை.

புஷ்டிக்கு கைகண்ட மருந்து.

இதை இன்றே பரீட்சித்துப்பார்க்கவும்.

ஆச்சரியமான குணம்! மிக இன்பமான சுகம்!!

புஷ்டியை உண்டாக்குவதில் இதற்கு நிகரற்றது! எந்த மருந்தும் இதற்கு இணையல்ல! ஒரே குளிகையில் பரீக்ஷை பார்க்கலாம்! தளர்ந்துபோன நரம்புகளுக்கு முறுக்கேற்றும்! வீரியத்தைக் கெட்டிப்படுத்தும், இல்வாழ்க்கையில் இன்பத்தைக் கொடுத்து ஊக்கத்தைத்தருவதில் இதற்கு மிஞ்சின அவுஷதமில்லை.

150-மாத்திரை ரூ. 10. 50-மாத்திரை ரூ. 4-0-0
20-மாத்திரை ரூ. 2. வி. பி. சார்ஜ்வேறு.

பிரமேக நிவாரணி.

ஒரே வேளையில் உங்கள் கஷ்டத்தை நிவர்த்தி செய்யும். பொறுக்க முடியாத வெள்ளை வெட்டை நீர்கடுப்பு, எரிச்சல், ரத்தமேகம், தந்திமேகம் உடனே நிற்கும். புட்டி ரூபா 2.

ரசமணி.

சகல வசியம், தனலாபம், அருள், கீர்த்தி, தொழிலபிவிருத்தி, நினைத்தகாரிய சித்தி மென்மேலும் பெருகும். தொத்து நோய், அவமிருத்து தோஷம், பேசவியாதிகள் அணுகாது. உபயோகிக்கும்முறை மணியுடன் வரும். மணி 1-க்குரூபா 2. 6 மணி ரூபா 10.

பினங்கு, சிங்கப்பூர், நேட்டால், முதலிய தேசவாசிகள் முன் பணம் அனுப்பவேண்டும்.

☞ T. R. கருப்பண பிள்ளை,
வைத்தியசாலை,
பழனி. S. I.

(Q. 40)

M. S. MAIDEEN ABDULKADER MARICAR,
& Doctor, T. N. SAMIPILLAI & Co.
MUHIADEEN MEDICAL HALL,
PORTO-NOVO, S. A. Dt.

எனது அன்பர்களே. எனது அன்பர்களே.

சற்று கவனியுங்கள். சற்று கவனியுங்கள்.

இனும்! இனும்!!

இந்த லேகியம்போல் பிற வைத்தியர்கள் செய்து கொடுக்கும் பக்ஷத்தில் ரூபா 1000 இனும் கொடுக்கப்படும்.

சிட்டுக்குருவி வீரதத்துவ லேகியம்.

எனது அன்பர்களே, சிட்டுக்குருவி லேகியமென்று சிலர் செய்து விற்கிறார்கள். அதாவது நரம்புகளுக்குத்தான் கொஞ்சம் வலுவைக்கொடுக்கும். இந்த லேகியம் அப்படியல்ல; எல்லா வியாதிகளையும் கண்டிக்கும்; இந்த வீர தத்துவ லேகியத்தினுடைய மகத்துவம் புசித்தவர்களறிவார்கள். இந்த லேகியமானது செய்யும் முறையும் பாகமும் தற்காலம் ஒருவரும் செய்தும் அறிந்துமிரார்கள். அதாவது சித்தர்கள் பெரியோர்கள் பெரிய பெரிய நாதாக்களுடைய செய்யும் முறை சுல்த்தான்கள் ராஜாக்கள் செய்து சாப்பிடும் வீர தத்துவம் தங்கிய லேகியம். தங்கம் குங்குமப்பூ கஸ்தூரி அம்பர் பவளம் முதலிய சிவசக்துக்களைக்கொண்டு சேகரிக்கப்பட்டது. இந்த லேகியமானது 1008 நரம்புகளுடைய வியாதிகளையும் சுத்தப்படுத்தி மேகவெட்டை மேகச்சூடு மேககாங்கை முதலியவற்றை நீக்கும். எங்கள் கம்பெனி மருந்தை ஒருமுறை தருவித்துச் சாப்பிடும் பக்ஷத்தில் தங்கள் ஆயுள் பரியந்தம் கைவிடமாட்டீர்களென்பது நிச்சயம்.

40 நாள் ஒரு மண்டலம்	டப்பி 1க்கு ரூ.	10—0—0
20 நாள் அரைமண்டலம்	டப்பி 1க்கு ரூ.	6—0—0
V. P. சார்ஜ் பிரத்தியேகம்		0—0—0

லேகியம் சாப்பிடும் முறை லேகியத்துடன் அனுப்பப்படும்.

N. B. வியாதியுள்ளவர்கள் டாக்டர் நேரில் பார்க்கவும். எங்கள் கம்பெனியில் எல்லா விதமான லேகியங்களும் மாத்திரைகளும் தைலங்களும் திராவகங்களும் பஸ்பங்களும் சகாய விலைக்குக் கொடுக்கப்படும்.

சிங்கப்பூர் பினங் மலாய் ஸ்டேட்களுக்கு மருந்துக்கிரயமும் தபால்செலவுக்காக ரூ 2ம் முன்னதாக மணிஆடர் அல்லது ரிஜிஸ்டர் மூலமாக அனுப்பவேண்டியது. அப்படி அனுப்பாவிட்டால் அனுப்பப்படமாட்டா.

எங்களுடைய கம்பெனிக்கு கமிஷன் ஏஜண்டு தேவை. தக்க கமிஷன் கொடுக்கப்படும். விபரம் கீழ்க்கண்ட விலாசத்திற்கு எழுதித் தெரிந்துகொள்ளவும்.

(தந்தி விலாசம்—முகையதீன்).

மானேஜர்: எம். எஸ். மெய்தீன் அப்துல்காதிர் மரைக்காயன்,
& டாக்டர் டி. என். சாமிப்பிள்ளை & கோ.,
முகையத்தீன் மெடிக்கல் ஹால்,
பரங்கிப்பேட்டை, தென்னுற்காடு ஜில்லா.

எங்கள் சோல் ஏஜண்டு:
P. செல்லையா செட்டியார்,
கொத்தமல்லி ரோட்டு,
நாவல்பட்டி போஸ்ட், சிலோன்.

(Y. 20)

தீபாவளி நெருங்கிவிட்டது.

கனவான்களே! உடனே ஆர்டர் அனுப்புங்கள்!!

விலைசரசம்! உடைநயம்!! அருமையான தினுசு!!!

சேலம் ஜவுளி தினுசுகள்.

எங்கள் கம்பெனியில் சேலத்தில்தயாராகும் சகல விதமான தினுசுகளிலும் நாட்டுக்கோட்டை நகரத்தார்களுக்கு விசேஷமாகப்பிடித்தமுள்ள தினுசுகளிலும், ஜோடி, துப்பட்டா, துயிலிமாதிரி அங்கவஸ்திரங்கள் பச்காணுக்களும், நயம் 120 செ. 100 செ. 80 செ. நூலில் பலகலர் பட்டினுலும் வெள்ளி ஜரிகையினுலும் கரைகளுடையதும் பலவிதமான பேட்டுகள் வைத்து அற்புதமான வேலைப்பாடுடையதும் பட்டினுலும் ஜரிகையினுலும் பலவிதமான முந்திகள்போட்டதும் முந்தியில்சிட்டை போட்டதாகவும் கிடைக்கும். உடல் நயம் வெண்பட்டில் ஜரிகைப்பேட்டுஜோடி; துப்பட்டாக்களும், பலகலர்பட்டு முடிலேஞ்சிகளும், பலகலர்பட்டுகளில் அருகுமுந்தியில் ஜரிகையினுல் பலவித உருவங்களமைத்து உடலில் ஜரிகைக் கொட்டடி போட்ட லேஞ்சிகளும் தயாராகிறது.

குறிப்பு:—எல்லா தினுசுகளும் நம்ம சொந்தத் தறிகளில் தயாராவதால் நெசவு அழுத்தமாகவும் கோட்டமுள்ளதாகவும் அருமையான தினுசுகளாகவும் கிடைக்கும். விலை சகாயமாக எல்லா ஆர்டர்களுக்கும் வி. பி. யில் அனுப்பப்படும். வி. பி. தினுசு பிடித்தமில்லாவிடில் திருப்பியனுப்பி வேறு தினுசு பெற்றுக்கொள்ளலாம்.

தந்திவிலாசம்,
ஜவுளி சேலம்,
Javuli Salem.

கா. கோ. அ. வே. கு ஓபுளிசெட்டியார் & Co,.
ஜவுளிவியாபாரம் கொகை சேலம்.

(Q. 44)

காகிதாடா சேலை.

16 முழ நீளம்; 2½ முழ அகலம்.

இந்தச் சேலைகள் வெள்ளை மல்லில் சிவப்பு, கறுப்புச்சேர்ந்த சாக்லெட் நிறம் போல், பூக்கள் புட்டாக்கள் போட்டு, சுற்றிலும் எழுத்துவேலையில் கரைகட்டியிருக்கும். இது புதுமாதிரி. இதுவரைக்கும் தயாரானதில்லை. விலை ரூபா 5—8—0.

வெள்ளிக்கெண்டைச்சால்வை.

5½ முழ நீளம்; 2½ முழ அகலம்.

இது மிகவும் நேர்த்தியாகவும் பளபளப்பாகவும் கைஸ் நூலினுல் நெய்யப்பட்டதுமான சால்வை.

ஒரு இஞ்சு வெள்ளிக் கெண்டைப் பட்டையுள்ளது. விலை ரூபா 7—0—0.

விலாசம்:— கனக அண்டு கம்பெனி.
பார்க்டவுன் போஸ்ட், மதராஸ்.

(Y. 18.)

சருவஞானேத்தர ஆகமம்.

ஞானபாதம் தமிழ் மூலமும் முத்திரத்ந விருத்தியும்.

இது ஸ்ரீகண்டபரமேசுவரரால் ஸ்ரீசுப்பிரமணியருக்கு உபதேசித்தருளப்பெற்றது. சைவசித்தாந்த சாரமாயுள்ளது. விருத்தியில் பல அரும்பெரும் விஷயங்கள் விளங்கும், வடமொழி மூலமும் சேர்க்கப்பெற்றிருக்கின்றது. நயம் கிளேஸ் காகிதத்தில் பக்கம் 200 வரையுள்ளது. வேண்டுவோர் நம்மிடம் பெற்றுக்கொள்ளலாம்.

விலை ரூபா 1—8—0.

தபால் சார்ஜ் வேறு.

ஒரே முறையில் ஐந்து புத்தகம் வாங்குவோர்க்கு ஒரு புத்தகம் சேர்த்துக் கொடுக்கப்படும்.

☞ பொ முத்தையபிள்ளை,
சிவாகம சங்கம்,
தேவகோட்டை.

(H. 20)

Telegrams: "APPANNA', BANGALORE CITY'

கெ. தி. அப்பண்ணு & கம்பெனி,

பெங்களூர் நகர்,
(இந்தியா).

பிரசித்திபெற்ற.

மைசூர் ஊதுவத்திகள்.

	ரூ.அ.பை.
பன்னீர்வத்திகள் சேர் 1க்கு விலை	0-12-0
	முதல் ரூபா 2-0-0 வரை.
புனுகுவத்திகள் சேர் 1க்கு விலை ரூபா	1-8-0
	முதல் ரூபா 4-0-0 வரை.
மத்தாப்புவத்திகள் சேர் 1க்கு விலை ரூபா	1-8-0
	முதல் ரூபா 3-0-0 வரை.
ஜவ்வாதுவத்திகள் சேர் 1க்கு விலை ரூபா	5-0-0
	முதல் ரூபா 7-0-0 வரை.
கஸ்தூரிவத்திகள் சேர் 1க்கு விலை ரூபா	5-0-0
	முதல் ரூபா 12-0-0 வரை.
அம்பர்வத்திகள் சேர் 1க்கு விலை ரூபா	1-8-0
	முதல் ரூபா 20-0-0 வரை.
வாசனைவில்லைகள் வில்லை 1க்கு விலை ரூ.	0-4-0
	முதல் ரூபா 5-0-0 வரை.
புனுகு தோலா 1க்கு விலை ரூபா	10-0-0
	முதல் ரூபா 12-0-0 வரை.
தசாங்கம் சேர் 1க்கு விலை ரூபா	2-0-0
	முதல் ரூபா 3-0-0 வரை.

கூந்தல் வளருந் தைலம்.

டில் மோஹினி ஹேர்ஆயில்புட்டி 1க்கு 0-12 0. டஸன் 1க்கு 8-0-0.
ஜாஸ்மின் ஹேர் ஆயில் புட்டி 1க்கு 0-12-0. டஜன் 1க்கு 8-0-0.
பளவர் பஹார் ஹேர் ஆயில் புட்டி1க்கு 0-12-0. டஜன் 1க்கு 8-0-0.
கமலா ஹேர் ஆயில் புட்டி 1க்கு 0-12-0. டஜன் 1க்கு 8-0-0.

ஓட்டோ வாஸனை வெண்டுகள்.

ஒரு கிராம் கொண்ட சிறியபாட்டல்கள் டஜன் 1க்கு விலை ரூபா 6-0-0

சந்தன சோப்புகள்.

டஜன் 1க்கு ... ... ரூபா 6-0-0

சந்தன மரத்தூள்.

பவுண்டு 1க்கு ... ... விலை ரூபா 1-8-0

தங்களுக்குத் தேவையான வாசனைத் திரவியங்களுக்கு உடனே எழுதுங்கள்.

Address:—
K. T. APPANNAH & Co,
Bangalore City.
(INDIA).

(Y. 16.)

உலகெங்கும்புகழ்பெற்றநற்சாட்சிகள்பெற்றது

புஷ்டிக்கு கைகண்ட

ஜீவரத்ன எலக்ட்ரிக் மாத்திரை.

ஒரு முறை தருவித்துப் பாருங்கள்!!

புஷ்டிக்கு இதற்கு நிகரானது ஒன்றுமில்லை. பரீக்ஷைக்கு ஒரே குளிகை போதும்; இழந்துபோன பலத்தை திரும்பக் கொடுக்கும்; நரம்புத் தளர்ச்சியடைந்து வருந்துவோர்க்குத் திவ்விய ஔஷதம். இல்வாழ்க்கையில் இன்பத்தைக் கொடுத்து ஊக்கத்தை தருவதில் இதற்கு மிஞ்சின அவுஷதமில்லை.

150 பில்ஸ் ரூ. 10. 50 பில்ஸ் ரூ. 4-0-0
20 பில்ஸ் ரூ. 2. வி. பி. சார்ஜ் வேறு.

பிரமேக நிவாரணி.

ஒரே வேளையில் உங்கள் கஷ்டத்தை நிவர்த்திசெய்யும். பொறுக்க முடியாத வெள்ளை வெட்டை, நீர்கடுப்பு, எரிச்சல், ரத்தமேகம், தந்திமேகம், உடனே நிற்கும். 1-புட்டி ரூ. 2.

பிளேக் மாத்திரை.

சுரம்கட்டி கண்டவுடனே ஒரு மாத்திரை சாப்பிட்டால் 9 மணி நேரத்தில் சுரத்தை நிறுத்தும்; ஜன்னி தோஷம் வராது. புட்டிக்கு ரூ 2. கட்டிக்கு பிளாஸ்திரி ரூ. 1.

T. R. கருப்பண பிள்ளை,
வைத்தியசாலை, பழனி. S. I.

(Q 41.)

இந்து சாதனம்

யாழ்ப்பாணம்:— ருதிரோற்காரிஞு
புரட்டாதிமீ 25உ வியாழக்கிழமை.

அந்தணர் கடமை.—க.

கிறீஸ்துமார்க்கம் புத்தமார்க்கம் இஸ்லாமார்க்கம் என்னும் மூன்று மார்க்கங்களும் எக்காலத்தும் அந்தந்த மார்க்கத்திற்குரிய குருமாரால் நன்கு போற்றி வளர்க்கப்படுகின்றன. யாழ்ப்பாணத்திலே கத்தோலிக்க மதம் புரோஸ்தத்தான்மதம் என்னும் இருவகைக் கிறீஸ்து மார்க்கங்களையும் தங்கள் விடாமுயற்சியாலும் திரவியத்தாலும் இங்கே பரப்பிய குருமாரும் பாதிரிமாரும் சிலகாலம் அதிக முயற்சியின்றி இருந்தார்கள். ஆனால் இப்பொழுது பழையபடி நீதியாகவோ அஃதின்றியோ தமது மார்க்கத்தை விருத்திசெய்யத் தொடங்கிக்கொண்டனர். இலங்கையிலுள்ள பௌத்தர்கள் இஸ்லாமானவர் செய்வதுபோல கிறீஸ்தவரும் தம்மதத்திலுள்ளவர்கட்கிடையே அம்மார்க்கத்தை விருத்தி செய்துகொண்டிருப்பரேல், சைவர்கள் அவ்விஷயமாக யாதுங் குறைகூற இன்றேல் துன்பப்பட இடமில்லை. கிறீஸ்தவக் குருமாரும் பாதிரிமாரும் போதகர்களும் போதனைமாதரும் சைவர்கட்கிடையே பிரவேசித்துப் பலவகையான வழிகளை அனுசரித்து, கல்விஞானமில்லாத சைவர்கள் பலரைத் தம்மார்க்கத்திற்கு இழுக்கலாயினர். இவற்றையெல்லாம் கண்டுகொண்டும் சைவர்கள் வாளாவிருப்பது முறையாகாது.

சைவசமயத்தைப் பெரிதும் பரிபாலிக்க வேண்டியவர்களான அந்தணர் சைவசமயத்திற்கு இப்பொழுது நேர்ந்திருக்கும் இடையூற்றைக் குறித்துச் சிறிதுஞ் சிந்தியாது கண்மூடிக்கொண்டு சும்மா திரிகின்றனர். ஏனைய வருணத்தார் சைவசமய பரிபாலனத்தின் பொருட்டுத் தம்மாலியன்ற முயற்சிகளைச் செய்துவர, பிராமமணர் மாத்திரம் சும்மாவிருப்பது தருமமாகுமா? சைவத்தைப் பரிபாலிக்க வேண்டியவர்களும் பூர்வத்தில் அங்ஙனம் பரிபாலித்து வந்தவர்களும் பெரும்பான்மையும் பிராமணர்களல்லவா? சைவசமயம் உய்யவந்தவதரித்த சமயகுரவர் நால்வருள் சுந்தரர் சம்பந்தர் மாணிக்கவாசகர் என்னும் மூவரும் பிராமணோத்தமர்களன்றே! பறங்கியர் ஒல்லாந்தர் நமது நாட்டைப் பரிபாலித்துச் சைவத்தை நசித்தபோது, சைவசமயம் முற்றாக இறந்துபோகாவண்ணங் காத்துவந்த கந்தபுராணத்தைப் பாடியருளிய கச்சியப்ப சிவாசாரியர் மறையவர்குலத் துதித்தவரல்லவா? யாழ்ப்பாணத்திலும் சிவராத்திரி புராணம் ஏகாதசி புராணம் பிள்ளையார் கதை முதலிய சைவ நூல்களைப் பாடிய வரதராச கவிராசர் வேதியர்குலத் துதித்தவரல்லவா?

கல்வியறிவொழுக்கங்களான் மேம்பட்டவராய்ச் சமயபரிபாலகர்களாய் ஏனைய மூன்றுவருணத்தாராலும் பூதேவரெனப் பூசிக்கப்பட்டுவந்த பிராமணோத்தமர்களின் வழித்தோன்றல்களென்று சொல்லப்படும் இக்காலத்துப் பிராமணர் உலக்கை தேய்ந்து உளிப்பிடியானவாறு, குறைவான நிலையில் இருந்தற்குக் காரணமென்னவென ஆராயுங்கால், கல்வியறிவின்மையேயாம். சிலரினுஞ் சிலரேயொழிய ஏனைய பிராமணர்கள் வடமொழியைச் சிறிதுங் கல்லாது, சிராத்தம் திதி அந்தியேட்டி முதலியவற்றைச்செய்தற்கு வேண்டிய சில மந்திரங்களைத் தமிழில் எழுதுவித்து மனனஞ் செய்துகொண்டு சீவனார்த்தமாக ஊருட் புறப்பட்டுவிடுகின்றனர். வேறுசிலர் கீழ் வருணத்தாரைப் பின்பற்றியொழுகத் தொடங்கி அங்கிலத்தையுங்கற்றுக்கொண்டு தமக்குரிய ஒழுக்கத்தை விடுத்து உத்தியோகம் பார்க்கத் தலைப்பட்டுக்கொண்டனர். இன்னுஞ் சில வாலிபப் பிராமணர் தலையைக் கத்தரித்து ஐயரென்பதனைச் சர்மா வாக்கிக்கொண்டு கையிற் பிரம்பும் மடியிற் பொடியும் முறையே பிடித்தும் வைத்துங்கொண்டு, தேகத்தில் 'பனியன்' இட்டுக்கொண்டமையினால் உபவீதம் மறைய, பிராமணர் சூத்திரரென்னும் பேதமின்றித் திரிகின்றார்கள். இன்னுஞ் சில வேதியர் கண்டனமெழுதியும் எழுதுவித்தும் பிறரைத் தூஷிப்பதே தமக்குப் போதுபோக்காகத் திரிகின்றனர். இப்படிப்பட்டவர் சைவசமயத்தைப் பரிபாலிப்பதெங்ஙனம்?

இவர்கள் இவ் வியர்த்தமான செயல்களையெல்லாம் விடுத்துத் தமக்குரிய பழைய ஒழுக்கங்களைக் கொள்ளவேண்டும். முதற்குலத்திற் பிறந்தாரேனும் ஒழுக்கமிலரேல் அவர்கள் தேங்காய்க் குலையுட் பதடி (ஒல்லி) போல மதிக்கப்படுவர். "மறப்பினும் ஒத்துக் கொளலாகும் பார்ப்பான், பிறப்பொழுக்கங் குன்றக் கெடும்" என்பர். பிராமணர் அதிபால்யத்திலேயே பிழைப்பின் பொருட்டுப் புரோகிதஞ்செய்யப் புறப்படுதலைவிடுத்து, சம்ஸ்கிருதம் தமிழ் என்னும் இருபாஷைகளையும் நன்கு கற்றல்வேண்டும். இதனால் ஆங்கிலம் படிக்கவொண்ணாதென்பது பெறப்படாது. அதனையும் இயலுமேற் கற்கலாம்.

சம்ஸ்கிருதம் படித்தற்குத் தக்க சம்ஸ்கிருத வித்தியாசாலையில்லையெனப் பிராமணர் குறைசொல்லிவந்தனர். இக்காலத்திலே சைவர்களின் அதிஷ்டந்தானென்று சொல்லத்தக்கதாக, யாழ்ப்பாணத்திலே சம்ஸ்கிருதமும் அதனோடு தமிழும் பயிலக்கூடிய வசதிகள் ஏற்பட்டிருக்கின்றன. சுன்னாகத்துள்ள பிராசீன பாடசாலை பிராமணச் சிறுவரும் ஏனைய வருணச் சிறுவரும் தமிழ் சம்ஸ்கிரும் என்னும் இருபாஷைகளையும் நன்கு கற்றற்குச் சிறந்த இடமாம். இதுமாத்திரமன்றி யாழ்ப்பாணம் இந்துக்கல்லூரி பரமேஸ்வரக்கல்லூரி என்னுமிருகல்லூரிகளிலும் சம்ஸ்கிருதக் கல்வியையும் ஊட்டுதற்கான ஒழுங்கு இப்பொழுது செய்யப்பட்டிருக்கின்றது. ஆங்கிலங் கற்கும் பிராமணச் சிறுவர் தயவுசெய்து "லத்தீன்" பாஷையை விடுத்து அதற்குப் பதிலாக சம்ஸ்கிருதம் பயில்வது நன்றாம்.

மதுக் கடைகளை நீக்க மறந்துவிடாதீர்கள்.

அடுத்த மாசமாகிய நவம்பர்மீ களஉ, யாழ்ப்பாணப் பட்டின பரிபாலன சங்க எல்லைக்குள் 7-ம் வட்டாரத்திலுள்ள ஆனைக்கோட்டைக் கள்ளுத் தவறணையும், வண்ணார்பண்ணை செம்பாட்டுக் கள்ளுத் தவறணையும், கொக்குவிற் சாராயத் தவறணையும் குறித்த எல்லைகளுள் வசிக்கும் தலைவரிப்பணங் கொடுப்பவர்களுள் நூற்றுக்கு அறுபது பெயர் விகிதம் சம்மதஞ் சொன்னால் நீக்கப்படுமென அரசினர் தெரிவித்திருக்கின்றார்கள். காற்றுள்ள போதே தூற்றிக்கொள்ளவேண்டுமென்ற பிரகாரம், கிடைத்த இந்தச் சமையத்தைத் தவறவிடாது இந்த மூன்று தவறணைகளையும் நீக்குதற்கான முயற்சிகளை எல்லோரும் இன்று தொடக்கஞ் செய்துவரல்வேண்டும். குறித்த தவறணைகள் நீக்கத்தின்பொருட்டுச் சம்மதம் பெறும் ஸ்தானங்கள் யாழ்ப்பாணம் இந்துக்கல்லூரியும், கொக்குவில் மிஷன் பள்ளிக்கூடமுமாம். மதுக்கடைகளை நீக்குவதற்கென ஆரம்பித்த மதுவிலக்குச் சங்கமொன்று வண்ணார்பண்ணையி லிருக்கின்றது. அவர்களும் இவ்விஷயத்திலே தங்களால் இயன்ற முயற்சிகள் செய்வார்கள். இத்தவறணைகளை நீக்குவதற்குப் பொருளுஞ் சிரமமும் விடாமுயற்சியும் ஆவசியகம் வேண்டும். ஆதலினாலே, செல்வர்களாயுள்ளவர்கள் இத்தரும விஷயத்திற்கு வேண்டிய பொருளைக் கொடுத்து உதவி செய்தல்வேண்டும். பொருளுதவி செய்ய இயலாதவர்கள் சரீர உதவியேனுஞ் செய்து, பெருந் தீமை விளைப்பனவாகிய இத்தவறணைகளை நீக்கிவிடுவார்களாக. இன்னுஞ் செய்யவேண்டியவற்றை அந்தச் சமையத்தில் வெளியிடுவேம்.

உலகம் பலவிதம்.

எந்தத் தேசத்திலே நாகரீகம் அதிகப்படுகின்றதோ அந்தத் தேசத்திலே லௌகிக இன்பமும் துர்க்கிருத்தியங்களும் அதிகப்படுதல் சகசமென்று பெரியோர்கள் சொல்லுவார்கள். உலகத்திலே நாகரீகத்தான் மேம்பட்ட இங்கிலாந்தின் தலைநகரமாகிய லண்டனிலுள்ள ஹைட் பார்க் முதலிய பூஞ்சோலைகளில் நிகழும் அக்கிரமச் செயல்களைப்பற்றி லண்டன் பிரதம குரு பெரிதும் வருந்தி, அங்கு வெளிவரும் "டயிம்ஸ்" என்னும் பத்திரிகையில் வெளியிட்ட வியாசத்தை மொழிபெயர்த்து இற்றைப் பிரசாத்திற் பிறிதோரிடத்திற் றந்துள்ளோம். குருவானவர் சொல்லுகிறபடி இச்செயல்கள் கேள்விப்படுபவர்களுக்கு மிக்க லச்சையையும் மனவருத்தத்தையுந் தருந்தன்மையன. 10 இரவில் 5 இடங்களில் 2615 துர்க்கிருத்தியங்கள் காணத்தக்கனவாயிருந்தனவென்றால் 365 இரவில் எத்தனை துர்க்கிருத்தியங்கள் நிகழுமென்பதை அபிமானிகளே கணக்கிட்டுப் பார்த்துக்கொள்க. "இலையும் பழுப்பும் எங்குமுண்டு" என்றவாறு உலகத்திலே நற்செயலுந் தீச்செயல்களும் எங்குமுண்டென்பது உண்மையாயினும் நமது பரத கண்டத்திலே இவ்வாறான தீய செயல்கள் எக்காலத்திலாயினும் இருந்தனவென்று யாம் அறிந்ததில்லை. காரணம் இந்துக்கள் எண்ணிறந்த நீதி நூல்களினாலே கட்டுப்பாடு செய்யப்பட்டிருக்கின்றனரென்பதே. அவர்களுடைய பழக்கவழக்க ஒழுக்கங்களும் அந்நீதிநூல்கள் வாயிலாகவே விதிக்கப்பட்டுள்ளன. மேலைத்தேசங்களில் நீதிநூல்கள் சிலவினுஞ் சிலவாம்.

* * *

தீயவொழுக்கங்கள் விருத்தியாதற்குப் பிறிதொரு பெருங் காரணம் மதுபானமாம். மதுபானமே பஞ்சமா பாதகங்களுள் நடுநாயகமாக வைத்தெண்ணப்படுவது. மதுபானம் ஒருவனிடத்துள்ள மானம் மரியாதையையும், ஒருத்தியிடத்துள்ள மடம் நாணம் அச்சம் பயிர்ப்பு என்னுங் குணங்களையும் அழித்துவிட அவ்விருபாலாரும் மனுஷருக்குரிய விசேஷ அறிவாகிய பகுத்தறிவை யிழந்து மிருகபான்மையினராய் எவ்வகைத் தீமைகளையும் அஞ்சாது செய்யத் தலைப்படுகின்றனர். இந்தியா இலங்கை முதலிய கீழைத்தேசங்களிலும் இக்காலத்திலே தீச்செயல் விருத்தியாகின்றவென்றால், மேலைத்தேசத்தி லிருந்து வரும் விதம் விதமான விலையுயர்ந்த மதுபானங்களும் அயிரோப்பிய நாகரீகமுமே இங்ஙனம் தீயவொழுக்கம் விருத்தியாதற்குக் காரணங்களாம். அயிரோப்பியரால் உவந்து கொண்டாடப்படும் "டான்ஸ்" என்னும் ஆநந்தக்கூத்து, கிழக்குத் தேசத்தவரால் பெரிதும் வெறுக்கப்படுவது. ஆனால் அயிரோப்பிய நாகரிகத்தைப் பொன்னைப்போற் போற்றத் தலைப்பட்டிருக்கும் நம்மவர் சிலர் காலகதியில் அதனையும் பின்பற்றுவர்போலும்.

* * *

சீர்திருத்தம் நாகரிகம் என்ற சொற்களின் அர்த்தத்தை உள்ளபடி விளங்கிக்கொள்ள எவரும் முயலவேண்டும். அயிரோப்பியர் சீர்திருந்திய சாதியினரென்று நாங்கள் சொல்லிக்கொள்ளுகிறோம். அஃதுண்மையே. அயிரோப்பியர் ஆதியில் இருந்த நிலைமையை நாங்கள் சரித்திர வாயிலாகப் படித்துள்ளோம். அந்தக் காலத்தில் அவர்கள் இருந்த நிலைமையோடு அவர்கள் இப்பொழுது இருக்கும் நிலைமையை ஒத்துப் பார்க்கும்போது அவர்கள் மிகச் சீர்திருந்திவிட்டார்கள். ஆனால் அவர்களுடைய சீர்திருத்தம் மற்றுஞ் சாதியினராலும் கொள்ளப்படவேண்டிய சீர்திருத்தமாய் இருக்கவேண்டுமென்ற நியாயமில்லை. உதாரணமாக இந்துக்கள் அதனைச் சீர்திருத்தமாக மதிக்கவேண்டுமென்ற நியாயமில்லை. ஏனென்றால் அயிரோப்பியர் கரும்புள்ளி செம்புள்ளி திட்டிக்கொண்டு மரவுரி தரித்துக் குருவிச்சையை வழிபட்டுத் திரிந்த காலத்திலே, இந்துக்கள் எல்லாவகையான சீர்திருத்தங்களோடுங் கூடியிருந்தனரென்பது சரித்திர வாயிலாக அறியத்தக்கது. ஆதலால் "எப்பொருள் எத்தன்மைத்தாயினும் அப்பொருள், மெய்ப்பொருள் காண்ப தறிவு" என்றபிரகாரம் எந்தச் சாதியினரிடத்தாயினும் கைக்கொள்ளத்தக்க நல்ல ஒழுக்கங்கள் காணப்பட்டால் நாமும் அந்த நல்லொழுக்கத்தை மாத்திரம் கைக்கொள்ளவேண்டும். சிப்பியிலிருந்து முத்தை யெடுப்பான்றி அதனோடு கூடிய ஊனை யெடுப்பாரில்லை.

* * *

இனி, லண்டன் பிரதமகுருவானவர் கூறுவதை நோக்குமிடத்து இங்கிலாந்திலுள்ள பொலிசிற்கும் இலங்கையிலுள்ள பொலிசிற்கும் பெரும் பேதமிருக்கின்றது. லண்டனிலே பொலிசருடைய சாட்சியம் ஊரவரின் சாட்சியத்தோடு ஒத்திராவிட்டால் நம்பப்படாதாம். ஊரவர் சொல்லாமற் பொலிசர் தனியே முறைப்பாடு வைத்தால் ஏற்றுக்கொள்ளப்படமாட்டாதாம். ஆனால் இலங்கையிலே பொலிசர் வாக்கையே வேதவாக்காக அதிகாரிகள் எடுத்துக்கொண்டு ஊரவர் வாக்கிற் பெரும்பான்மையுஞ் சந்தேகமுறுகின்றார்கள். லண்டனிலே உண்மையாக நிகழுங் குற்றங்களையும் பொலிசர் ஒப்பேற்றுவது கஷ்டமாயிருக்கின்றது. இங்கே அதற்கு மாறாகவிருக்கின்றது. இதுபற்றித்தான் "உலகம் பலவிதம்" என்பர்.

பத்திரிகாபிமானிகள் தங்களால் வரவேண்டிய பத்திரக் கிரயத்தைத் தயைசெய்து காலதாமசமின்றி அனுப்பிவைப்பார்களாக.

சமாசாரம்.

காலநிலை:—மழையின்மையால் நெற்பயிர் வாடுகின்றது. இன்னுஞ் சிலதினங்கட்கு மழை பெய்யாது விடின் பயிர் எரிந்துபோமெனக் கமக்காரர் பெரிதும் பயப்படுகின்றனர்.

மகாத்மாகாந்தி யவர்களின் ஜெனனதினக் கொண்டாட்டம்:—நிகழும் அக்டோபர்மாதம் 2ந்திகதி அளவெட்டி ஆங்கிலவித்தியாசாலையில் மகாத்மாவின் ஜெனனதினம் கொண்டாடப்பட்டது. அத்தருணம் ஸ்ரீ த. சின்னத்தம்பி உபாத்தியாயரின் அக்கிராசனத்தின்கீழ் ஒரு கூட்டம்நடைபெற்றது. அதன்பின் அப்பள்ளிக்கூடவளவிலிருக்கும் வயிரவர்கோவிலில் அவர் பேரினால் ஒருபூசையும் நடைபெற்றது.

காரைதீவு இந்துவாலிபசங்கம்:—இச்சங்க ஆதரவின்கீழ் மகாத்மாகாந்தியின் ஜெனனதினக் கொண்டாட்டம் இச்சங்க புத்தகாலயத்தில் சென்றசெவ்வாய்க்கிழமைபிற்பகல் 4மணியளவில் நடைபெற்றது. மகாத்மாவின் படத்துக்கு மாலைசூட்டப்பட்டு மகாத்மாவைக் குறித்து அனேகபாடல்கள் பாடப்பட்டன. அவரின் ஜீவியசரித்திரம் சுருக்கமாய் பிள்ளைகட்குப் போதிக்கப்பட்டது. நிகழும் புரட்டாதிமீ 8ந்திகதி (24-9-23) திங்கட்கிழமை இரவு ஏழு மணியளவில் வியாவில்தீர்த்தக்கரையில் ஸ்ரீமத் மகாதேவசாமியவர்களால் குருபக்தி எனனும் விஷயமாகச் சிறந்தபிரசங்கஞ் செய்யப்பட்டது.

பரிசளிப்புக் கூட்டம்:—சென்ற ஞாயிற்றுக்கிழமை (7-10-23) மாலை 6 மணியளவில் சுன்னாகம் பிராசீனதாவியபாடசாலைப் பரிசளிப்புக் கூட்டம் நடைபெற்றது. ஸேர். பொ. இராமநாதனவர்கள் அச்சமையத்தில் சபைத்தலைவராகவிருந்து பரிசளித்தார். சென்றவருட அறிக்கைப்பத்திரமும் வாசிக்கப்பட்டது. மாணாக்கர் சம்ஸ்கிருதத்திலும் தமிழிலும் மநகப் பிரசங்கம் முதலியன அதிக திறமையோடு செய்தனர். ஸேர். அம்பலவாணர் கனகசபையவர்களும் ஸ்ரீ T. A. துரையப்பாபிள்ளையும் ஸ்ரீ நவநீதகிருஷ்ணபாரதியாருங் குறிப்புரை கூறினர். இவ்வித்தியாசாலை ஆரம்பகர்த்தாவாகிய பிரம. ஸ்ரீ. சதாசிவ ஐயரவர்கள் இப்பாடசாலை ஆரம்பிக்கப்பட்டநோக்கத்தை இனிது விளங்கிக் கூறினர். சபைத்தலைவர் குறிப்புரை கூறியபின் தேவாரபாராயணத்தோடு கூட்டம்நிறைவேறியது.

குழந்தையின் அபாயமரணம்:—புசல்லாவைக்குச் சமீபமாய் அற்றுபேச் எனும் கிராமத்திலே தமயனுந்தம்பியுமாகிய இருசகோதரர்களுக்கிடையிலே பெரியசண்டையுண்டாய் இருவரும் அடிபிடிப்படும்வேளை அவர்களுள் ஒருவனின் மனைவி தனதுசிறிய கைக் குழந்தையையுங்கொண்டு இடைநின்று அவர்களை விலக்கிநிற்கும்வேளை ஒருவர்ஓங்கியகை அவள் குழந்தையின் தலையிலே தாக்கமாய்விழ அது அவ்வடியைத் தாங்கமாட்டாது சுழன்றுவிழுந்து உயிர்துறந்தது.

யானைகளை அகப்படுத்துதல்:—விந்தனை ரட்டமத்தியா 6 யானைகளைத் தடமிட்டு அகப்படுத்துவித்தார். இவற்றுள் 3 யானைகள் இறந்து போயின. மற்றை மூன்றும் கண்டிக்கு விலைக்கு அனுப்பப்பட்டன. இங்கே வேறும் பல யானைகள் மட்டக்களப்பிலுள்ள யானைபிடிப்போரால் அகப்படுத்தப்பட்டன. அகப்படுத்துவோர்களுக்கு ஒரு அடி உயரத்திற்கு 150 ரூபா விகிதம் கொடுக்கப்படுகின்றதாம். இவர்கள் 5 அடி உயரத்திற்கு மேற்பட்ட யானைகளை அகப்படுத்துவதில்லையாம். 5 அடிக்கு மேற்பட்ட யானையானால் அதனை அடக்குவது கஷ்டமாம். நான்கு ஐந்து அடிக்குக் குறைந்த யானையாயிருந்தால் இதனை வளர்ப்பது பெரிதுங் கஷ்டமாம்.

பளிங்குபோலும் சட்டி பானை:—களனிக்குச் சமீபமாயுள்ள வறகொடையிலே பளிங்குபோலும் அழுத்தமும் மினுக்கமுமான சட்டி பானைகள் செய்யப்பயிற்றும் பாடசாலையொன்றிருக்கின்றது. அந்தப் பாடசாலையார் ஸ்தாபித்திருக்கும் சூளையிலே சுட்டெடுக்கப்படும் பாத்திரங்கள் வெகு திறமானவைகளாய்ப் பலரும் விரும்பி வாங்கத்தக்கனவாயிருக்கின்றன. மாதிரிப் பாத்திரங்கள் உபவித்தியாகர்த்தரின் கந்தோரிலே வைக்கப்பட்டிருக்கின்றன. அவைகளைக் கண்ட பலர் தமக்கு விருப்பமானவைகளைச்செய்விக்க மாதிரி கொடுத்திருக்கிறார்கள். பிறதேசங்களிலிருந்து இலங்கைக்குவரும் இவ்வகைப் பாத்திரங்களைப் பார்க்குமிடத்து இக்கைத்தொழில் முயற்சி இலங்கைக்குப் பெரிய நயத்தைக் கொண்டுவருமென்று சொல்ல இடமாகிறது. —ச. வே. பா. கா-ன்.

சகோதரனைக் கொன்றவன்:—சுமோதராவில் ஒரு பொலிஸ் உத்தியோகத்தன் சிறிது மாறுட்டமடைந்து தன் சகோதரனுடன் மாறுபட்டு அவனைக் கத்தியால் வெட்டிக் கொல்லப்போனான் இதற்கிடையில் அவனுடைய சகோதரி விலக்கி விடும்படி செல்ல அவளை வெட்டிக் கொன்றுவிட்டான். பின்னர் சகோதரனைப் பிடித்து அவனையும் படுகாயப்படுத்திவிட்டு துப்பாக்கியொன்றெடுத்துக் கொண்டு அங்குள்ள முதலியாரைத் தேடிப்போனான். முதலியாரை வீட்டிற் காணாமையால் மீண்டு கடைக்குப்போய் மீன்வாங்கிக்கொண்டு வந்து

ஒரு சிங்களவன் வீட்டிற் போட்டு விட்டுத் திரும்பித் தன் வீட்டிற்குச் சென்று கலகஞ் செய்தான். இதற்கிடையிற் பொலீசர் ஆயுதபாணிகளாகச் சென்று அவனை அகப்படுத்திக் கொண்டுபோயினர். காயமடைந்தசகோதரன் வைத்தியசாலையில் ஆபத்தான நிலையிலிருக்கின்றானும்.

சாகத்துணிந்தவரைத் தடுக்கமுடியுமா:— கேகாலைக் கணித்தான சப்பகொடா என்னுமிடத்தில்வசிக்கும் சந்திரசேகரபண்டா என்னுமொருசிங்களவன் கீழ்வருணத்திலுள்ளவளாகிய தன் காதற்கிழத்தியை வைப்புடைத்து வீட்டிற்பூட்டிவைத்தமையை அவளுடைய தந்தையறிந்து பொலிசரை அழைத்து வருதலும் அதுகண்ட பண்டா ஒரு மாமரத்திலேறிக் கயிற்றை மாட்டிச் சுருக்கிட்டுத் தற்கொலை செய்யமுயலும்போது பொலிசர் அவனைப் பிடித்து அங்ஙனஞ் செய்யவொட்டாது தடுத்துப் பொலிஸ்தானத்திற்கு விலங்கிட்டுக் கொண்டு போவாராயினர். பொலிசரும் இவனும் மகாஓயாப்பாலத்துக்கு மேலாகப் போகுஞ்சமயத்தில் பண்டா பொலீசர் அறியாதபடி ஒரு பொலிசின் உடையின்மேல் மாட்டப்பட்டிருந்த பட்டியை அவிழ்த்து விடுதலும் அது கழுவ பொலிஸ் பட்டி கழுவாதபடி இவனை விடுத்துப்பட்டியைக் கட்டுவதற்கிடையில் இவன் பாலத்தினின்றும் பிசப்பதிலுள்ள ஆற்றுட்குதித்துக் கன்மேல் வீழ்ந்து தேகம் முழுவதும் காயமடைந்து ஆபத்தான நிலையில் வைத்தியசாலையிற் போடப்பட்டிருக்கின்றான்.

ஜர்மனியரின் ஆச்சரியமான வேலை:— ஜர்மனியர் தமதுநாட்டிலே ஆகாயமார்க்கமாக வரும்ரதங்களைத் தாமாக விழச் செய்யத்தக்க ஒரு ஆச்சரியமான முறையைக் கண்டுபிடித்திருக்கின்றார்களென்று சொல்லப்படுகின்றது. சென்ற ஜனவரி தொடக்கமாகஇற்றைவரையில் 30 பிராஞ்சிய விமானங்கள் இப்படிவிழும்படியாகச் செய்திருக்கின்றனராம். ருமேனியாவைச் சேர்ந்த 12 விமானங்களும் இவ்வாறு வீழ்த்தப்பட்டனவாம். காலகதியில் இன்னும் எத்தனை நூதனங்கள் நிகழுமோ யாரறிவார்.

விவாகப்பொருத்த மழிப்பது:— ஐரோப்பிய அமரிக்க தேசங்களிலே கண்டகண்டபடியெல்லாம் புருஷனும் மனைவியும் சேர்ந்து தமக்குள்ள நிலையான விவாகபந்தனத்தைச் சிறுபிள்ளைகள் மண்கோட்டை கட்டி அழிப்பது போல அழித்துவருவதானது ஓர் கொள்ளைநோய் போலப் பரந்துகொண்டு வருகின்றது. இதனாலுண்டாகுங்கேடுகளை முந்தமுந்தக் கண்டுணர்ந்தது பிராஞ்சுதேசமே. அங்கு சென்ற வருடத்திலே பிறப்பு எவ்வளவோ குறைந்துவிட்டது. அதனாலே மார்சேலிஸ் நகரிலே கூடிய சங்கத்திலே ஒரு விவாகம் நடந்து இரு வருடங்களின்பின் விவாகபொருத்தத்தை அழிக்கப்படாதென்றும் விவாகபொருத்தத்தை அழித்த பெண்கள் மறுவிவாகஞ் செய்யப்படாதென்றும் விவாக பொருத்த மழிப்பதற்குப் புருஷனே காரணமாயிருப்பானாயின் அவனுக்கு மூன்றுமாச கடின ஊழிய மறியற் றண்டனை இடப்படவேண்டு மென்றும் தீர்மானங்கள் செய்யப்பட்டன. —ச. வே. பா. கா-ன்.

லண்டன் நகரிலுள்ள "ஹயிட் பார்க்" என்னும் பூஞ்சோலையில் நிகழும் அக்கிரமங்கள்.

லண்டன் பிரதம குருவின் முறையீடு.

லண்டன் பிரதமகுரு (Bishop of London) அந்நகரிலுள்ள "ஹயிட் பார்க்" (Hyde Park) என்னும் பூஞ்சோலையிலும் மற்றும் வெளியான இடங்களிலும் நிகழும் அக்கிரமங்களைப்பற்றிப் பின்வருமாறு "லண்டன் டயிம்ஸ்" என்னும் பத்திரிகையில் முறையிடுகின்றார்:

"ஐயா,

இப்படிப்பட்ட அசங்கியமான விஷயங்களைப்பற்றி வெளியிடுதல் ஒருவருக்கு லச்சையைத் தருவது இயல்பாயிருந்தாலும், விசேஷமாக ஹயிட்பார்க்கிலும் அதுபோன்ற மற்றுமிடங்களிலும் இக்காலத்தில் நடந்துவரும் துர்க்கிருத்தியங்களை அவசியம் வெளியிடவேண்டி யேற்பட்டிருக்கின்றது.

இந்த இடங்களிலே பட்டப்பகலிற் சனங்கள் வெளிவெளியாக வெறுப்பைத் தரக்கூடிய துர்க்கிருத்தியங்களைச் செய்துவருகிறார்கள். இந்த இடங்களில் மாலைக் காலத்திலும் இராக்காலத்திலும் நடக்குந் துர்க்கிருத்தியங்கள் இப்படிப்பட்டபத்திரிகைகளிலெடுத்துச்சொல்லுந் தரத்தனவல்ல. லண்டன் நகரத்திலே சன்மார்க்கத்தை விருத்திபண்ணுதற்கு ஏற்பட்டுள்ள சபையின் அக்கிராசனராக நானேயிருக்கின்றேன். இச்சங்கத்தார் இப்படிப்பட்ட பூஞ்சோலையில் நிகழும் விஷயங்களை நன்கு ஆராய்ந்து அதிகாரிகளுக்கு முறையிடும்படி சிலரைச் சிலவருடகாலமாக நியமித்தனர். பொலிசரைப் பற்றி அவருள்ளும் விசேஷமாக ஹயிட்பார்க் என்னுஞ் சோலையைக் காவல்புரியும் பொலீசரைப்பற்றி நான் எவ்வகையான குறையுஞ் சொல்லமாட்டேன். அவர்கள் இவ்விஷயத்தில் இயன்றவரையில் எங்களுக்குத் துணையாகவே நிற்கின்றார்கள். அவர்கள் இவ்விஷயத்தில் தாங்கள் ஏதும் பிழையைச் செய்துவிடக்கூடும் என்ற அச்சத்தினாலும், பத்திரிகைகள் தம்மை நியாயமின்றிக் கண்டிக்கக்கூடுமென்னும் பயத்தினாலும் சிறிது பின்னிற்கின்றார்கள்.

ஹயிட்பார்க்கில் நிகழும் விஷயங்களை 10 இரவில் கவனித்தபோது 746 அக்கிரமச் செயல்கள் கவனிக்கத்தக்கனவாயிருந்தன. இப்படிப்பட்ட வேறு 5 இடங்களில் 10 இரவுகளில் கவனித்தபோது 2615 துராகிருதச் செயல்கள் கவனிக்கத்தக்கதாகவிருந்தன. இத்துராகிருதச்செயல்களைக் கண்ட பிறர் யாராயினும் முறைப்பாடு செய்தாலொழியப் பொலீசர் எவ்வகையான முறைப்பாடுஞ் செய்யவொண்ணாதென்ற ஒரு விபரீதவிளக்கம் இங்கே ஏற்பட்டிருக்கின்றது. இப்படிப்பட்ட முறைப்பாடுகளில் வேறுயாருஞ் சாட்சியஞ் சொன்னாலன்றிப் பொலீசர் சாட்சியம் ஏற்றுக்கொள்ளப்படுவதில்லையாம். இதனாலே இத்துர்த்தர்கள் மேலும் மேலும் அதிக துர்க்கிருத்தியங்களைச் செய்யத் தலைப்படுகின்றார்கள். பிரித்தானிய சக்கிராதிபத்தியத்தின் தலைநகராகிய லண்டனிலுள்ள இந்தச் சோலைகளில் நிகழுஞ் சம்பவங்களை, இங்கிலாந்திற்கு வரும் அந்நியர் கண்டு முறையிடும்போது கேட்கப் பெரும் வெட்கமாயிருக்கின்றது.

இந்தப் பூஞ்சோலைகள் ஆதியில், சனங்கள் இளைப்பாறுவதற்கும் தேகாரோக்கியத்தைத் தருதற்குமாக ஸ்தாபிக்கப்பட்டுள்ளன. இப்பொழுது மரியாதைக்கு உடன்பட்டவர்கள் இந்த இடங்களுக்கு வரக் கூசுகின்றார்கள். ஐயா பத்திராசிரியரே, இந்தத் துர்க்கிருத்தியங்கள் இனிமேல் நடவாதபடி முயற்சி செய்யும்படியே உமது பத்திரிகை மூலமாகச் சனங்களுக்கு முறையிடலானேன். பகல் முழுதுங் கஷ்டமான வேலை செய்து பிழைக்கும் ஆண்களும் பெண்களும் சிறுவர் சிறுமியரும் தங்களுக்கு உரியனவென்று விடப்பட்ட இந்தப் பூஞ்சோலைகளில் வந்து இளைப்பாறத் தக்க வசதிகளை நாம் ஆவசியகஞ் செய்யவேண்டும்".

இந்திய சமாசாரம்.

எண்பத்தோருநாள் உண்ணாவிரதம்.

ஒரு ஜெயின தபசியின் அருஞ் செயல்.

"லயிவ் ஆப் இந்தியா" பத்திரிகையில் ஒரு நிருபர் பின்வருமாறு எழுதுகின்றார்:—

எவ்விதமான உணவுமின்றி 60 நாள்வரை ஒருவர் பிழைத்திருப்பதே மிகவும் அரிய விஷயமாகுமென்று தற்கால பூதபௌதிக சாஸ்திர நிபுணர்கள் நம்புகின்றனர். இவர்கள் தாங்கள் நெடுநாளாகச் செய்துவரும் ஆராய்ச்சியையும் அநுபவத்தையுங் கொண்டு அம் முடிவிற்கு வந்திருக்கிறார்கள். தற்பொழுது தவசி சுந்தரலால்ஜீ என்ற ஜெயின மகான் அம் முடிவைப் பொய்யாக்கிவிட்டார். செப்டெம்பர்மீ 25உ அவர் தமது உண்ணாவிரதத்தை முடித்தார். அவர் சென்ற 81 தினங்களாக உண்ணாவிரதமிருந்துவந்திருக்கிறார். அவர் தற்காலம் பம்பாய்க்கருகிலுள்ள காட்கோபார்என்றகிராமத்தில் தங்கியிருக்கின்றனர். இந்தத் தபசியைப் பார்ப்பதற்காக ஆயிரக்கணக்கான ஜெயினர்களும் ஜெயினரல்லாதவர்களும் வந்துகொண்டிருக்கின்றனர். தற்காலத்தில் அவர் மாதிரி எவரும் அவ்வளவு அதிக காலம் உண்ணாவிரதமிருந்ததில்லை. நான் பார்க்கும்பொழுது அவர் தமது படுக்கையில் படுத்துக்கொண்டிருந்தார். அவர் மிகவும் அமைதியாக இருந்தார். ஜனங்கள் அவருடைய தேகசௌக்கியத்தைப்பற்றி வினவியபொழுது அவர் சந்தோஷத்துடன் கூறியதாவது:-"நான் முற்றிலும் தேகசௌக்கியமுடையவனாக இருக்கின்றேன். என்னுடைய தேகசௌக்கியமானது சிறிதுங் கெட்டுப்போகவில்லை. எனது தேகத்தின் எப்பாகத்திலும் எனக்குச்சிறிதுநோயுண்டாகவில்லை."

—ஸமரஸபோதினி.

"பணம்" "பணம்"

"பணம்" இதென்ன விளம்பரம்? "பணம்" என்னும் பத்திரிகையைப் பற்றியதோ? ஆம். "பணம்" என்னும்பெயரைக் கேட்டவுடனேயே உள்ளம் இன்பக்கடலாடுகின்றது. இது ஒரு தமிழ் வாரப்பத்திரிகை. இதன் ஆசிரியரை நாம் நெடுங்காலமாக அறிவோம். செந்தமிழ்நாட்டில் சிறுவர் சிறுமியர் முதல் விருத்தர் ஈறாக யாவரும் மனமுவந்து வாசிக்கக்கூடிய பத்திரிகை "பணம்" பத்திரிகையேயாகும். ஒருவாரத்தின் செய்திகள் அத்தனையும் ஒன்று கூட விடாமல் தன்னகத்தே தாங்கி நிற்கும் திறன் "பணம்" பத்திரிகைக்கு உண்டு. இவ்வொரு பத்திரிகையைமட்டும் வாசித்தால் ஒரு தினசரிப்பத்திரிகையைத் தொடர்ந்து வாசிப்பதிலும் அதிகமான சங்கதிகளை அறியலாம். உடனே "பணம்" பத்திரிகையைப் பெறுங்கள். சந்தாதாரராகுங்கள். வருடமுடிவில் ஒருபுஸ்தக உருவமாகக்கூடிய சிறப்புடையது. உடனே எழுதுங்கள். உங்களுக்கு இது அவசியமான பத்திரிகை.

வருடச்சந்தா ரூபாய் ஐந்து.
விலாசம்:—மானேஜர் "பணம்"
ஆபீஸ், திருச்சி.

கடிதம்.

ஸ்ரீலஸ்ரீ. நாவலர் வாசிகசாலை.

இன்றைக்குச் சில வருடங்கட்குமுன் யாழ்ப்பாணத்திற் சிறந்துவிளங்கிப் பலதுறைகளினும் உழைத்தவரும் சமயாபிமானமும் பாஷாபிமானமும் தேசாபிமானமும் வாய்ந்தவரும் பொன்றுபுகழுடம்பு பெற்றவருமாய ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலரவர்களின் ஞாபகத்திற்கு ஓர் அடையாளமாக யாழ்ப்பாணிகளும் ஏனைய தமிழ்மக்களும் இதுகாறும் ஒன்றுஞ் செய்யவில்லை. வருஷமொருமுறை யவருடைய குருபூசைத்தினத்தைக் கொண்டாடி வருவது வழக்கம். இதுவுமல்லாமல் சென்ற இரண்டுமூன்று வருடங்களாக யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரியில் அக் குருபூசைத் தினத்தி லன்று சிலர் கூடிப் பிரசங்கஞ் செய்வதும் வழக்கம். வருஷமொருமுறை இவ்வாறு நண்பர் சிலர் கூடி அப்பெருமானுடைய குணாதிசயங்களையும் கல்வித் திறமை முதலியவற்றையும் எடுத்துப் பேசினால்மாத்திரம் போதாது. இப்போ நம் நாட்டில் அநாகரிகமும் சமயவுணர்ச்சிக் குறைவும் நம் பூர்வீக பழக்க வழக்கங்களைக் கைவிட்டு மேலைத்தேச நாகரிகத்தைக் கைக்கொள்வதையும் பலவிடங்களிலுங் காணுந்தோறும் இன்னுஞ் சில காலத்துள் இப்பெருமானின் பிரயத்தனங்களினால் நம்மிடையே யேற்பட்ட சமயவுணர்வும் பாஷாஞானமும் இல்லாது அழிந்துபோமோவெனப் பயப்படவேண்டியிருக்கின்றது. இதை நன்குணர்ந்த அபிமானப் பிரபு ஒருவர் சுதேசியத்தையும் சுய பழக்கவழக்கங்களையும் சுய பாஷையையும் நம்மிடையே வளர்ப்பதற்காக என்ன எத்தனங்கள் செய்யவேண்டுமென யோசித்து ஓர் சங்கமேற்படுத்தினால் நல்லதெனத் தீர்மானித்திருக்கிறார். சங்கம் ஏற்படுத்தி அதனால் வரும் லாபத்தையும் அடைவோம். அத்துடன் அடியேன் மனதிலுதிக்கும் எண்ணத்தை இத்தால் வெளிப்படுத்தி அன்பரின் அபிப்பிராயத்தையும் வேண்டி நிற்கிறேன். அமெரிக்காவிலும் மற்றும் நாடுகளிலும் (Travelling Library யென்று சொல்லப்படும்) வீடுகள் தோறும் புஸ்தகம் முதலிய அறிவூட்டுங் கருவிகளைக் கொண்டுபோய்க் கொடுக்கும் ஏற்பாடுகளைச் செய்திருக்கிறார்கள். இப்படிச் செய்தாலென்ன? இப்பெருமானின் பெருந் தொண்டை நாமும் செய்ய முடியாவிட்டாலும் இது சுலபமான வழியாகத் தோற்றுகிறது. ஓர் கடிதன்.

சுபோதத் துணுக்குகள்.

ஐயன்மீர்! அன்னிற்கொண்மின்.

தந்தை தாய் தமையன் குரு இவர்களது வார்த்தைகளை எக்காலத்தும் நிராகரிக்கற்க; கொடுத்ததைப் பிறர்க்கெடுத்துக் கூறிப் புகழற்க; கோட்சொல்லுவோரது வார்த்தைக்குச் செவிசாயற்க; பூப்புடை மனைவியைத் தீண்டற்க; மனைவியோடு ஒருசேர இருந்து உண்ணற்க; அவளோடு துயிலற்க; உடையொழித்து நீராடற்க; பிறரணிந்த செருப்பு மிதியடி முதலிய பாதரட்சைகளைத் தரியற்க; பல்லை நகத்தாற் கிளைத்தல், பாழ்மனையில் நித்திரை செய்தல், துயிலுபவரைக் காரணமின்றி யெழுப்புதல், தனிவழிச் செல்லல் ஆகிய இவைகளை எக்காலத்துஞ் செய்யற்க; தான் ஒருவருக்குங் குற்றஞ் செய்யாதிருந்து பிறர் குற்றங்களைக் கண்டித்துத் திருத்துக. சுற்றத்தவரையும், தேவர்களையும், சற்குருவையும், வேதாகமங்களையும் இகழற்க; குற்றஞ் செய்யாதவனைச் செய்ததாக நிரூபித்தலும், ஒருவன் செய்த குற்றத்தை இன்னொருவன்மீது சுமத்துதலும், அடைக்கலம் புகுந்தோர்க் கல்லல் செய்தலும், சேவல் ஆட்டுக்கடா முதலியவைகளை ஒன்றோடொன்று சமராட விடுதலும், பஞ்சப்புலன்கள் சென்ற வழியில் பகுத்துணராது ஒழுகுதலும் ஆகிய இத்தீநெறிகளைக் கடிந்து நீக்குக. வார்த்தையாடிக்கொண்டும், சிரித்துக்கொண்டும், நடந்துகொண்டும், அசுத்தமான இடத்திலிருந்தும் உண்ணற்க. இருளிலே வெளிச்சமின்றியும், பாதரட்சையின்றியும், துட்டரோடும், வெறியரோடுஞ் செல்லற்க. பண ஆசையினால் தன் வயசின் மேம்பட்ட வனிதையை மணஞ் செய்யற்க. வீதியிலே நிற்கும் நிழலுக்குரிய மரங்களை வெட்டற்க. மண்ணாசை பெண்ணாசை பொன்னாசையால் லெடுபட்டுத் தன் மனச்சாட்சிக்கொவ்வாத சமயங்களை ஒருபோதுங் கைக்கொள்ளற்க. சீவர்களை வதைத்தருந்தல், மாமிசம் புசியாதவரை யுண்பித்தல், உண்ணும்படி கேட்டவருடைய வார்த்தையை மறுக்க மாட்டாமல் தாட்சணியத்தினாலுண்ணுதல், மாமிசஞ் சாப்பிடாத வருக்கு நோய் வந்தவுடன், அது உண்ணாதலினால் இந்நோய் வந்ததெனப் போதித்து உண்பித்தல் ஆகிய இச்செயல் களனைத்தும் பாதகங்களாகும். நடுவுநிலைமையைக் கைவிட்டுப் பேசுதல், பாதகருக்காகப் பரிந்து பேசுதல், தன்னையே புகலிடமென்று நம்பிவந்த ஏழையைக் கைவிடுதல், கைக்கூலி கொடுத்துப் பொய்ச்சாட்சி சொல்லுவித்தல், வலியவனோடு சேர்ந்து கொண்டு எளியவனுக்கு இன்னல் விளைத்தல், வலியவன் குறை நினைப்பானென்று ஏழைக்குக் கண்ட சாட்சி சொல்ல மறுத்தல், வெல்லா வழக்கை விலைகொடுத்து வாங்கிப்பேசி ஏழைகள்வயிற் மண்ணிடுதல் முதலியயாவும் மகாபாதகங்களாகும். பழைமையாயுள்ள உயிர்க்குயிராகிய நண்பனைக் காரணமின்றிப் பகைத்தல், சென்மசத்துருவோடு வலியப்போய்ச் சிநேகஞ்செய்தல், நெடுங்காலமாகக் கூடிஇருந்து வேலைபார்த்து வந்த நம்பிக்கையான வேலாளனைத் துரத்திவிடுதல், தன்னைத்தானே வியந்து புகழுதல், எல்லாரிடத்திலும் நம்பிக்கையின்றிச் சந்தேகங் கொள்ளுதல், ஆகிய இக்குணங்கள் ஒருவனுக்குக் கேடுவருவதற்கு முன்னறிகுறிகளாகும். கல்வியறிவுடைய பெரியோர்கள், கடவுள் வணக்கத்திலும், அறிவுவளர்க்கூடிய சாத்திரங்களை ஆராய்தலிலும், தங்களையொத்த மேதாவியர்களோடு ஞானப்பியாசஞ் செய்தலினுஞ் சந்ததமுங் காலம்போக்குவர்; கல்வியறிவற்றமந்தமதிகள், கணிகையரின்பம் சொக்கட்டான், சீட்டு, பேலி, கட்டையுருட்டுதல் முதலியசூதுகள், மதுபானம் மாமிசபட்சணங்களோடு கூடிய உண்டாட்டுக் களியாட்டுக்கள் முதலிய துர்விஷயங்களிற் காலம்போக்குவர். நற்குண நற்செய்கைகளையுடைய உத்தமமடவார், கடவுளைப் போலத்தன் நாயகனையெண்ணி, அவருடையமனம் நோகாமல் குறிப்பறிந்து குற்றேவல்செய்தலிலும், குடும்பபாரம் முழுதையுமேற்று நாயகனுடைய வருவாய்க்குத்தக்க செட்டான செலவு செய்து சீவியம் நடத்துவதிலும், பிள்ளைகளைச் சன்மார்க்க வழிகளிலே யொழுகும்படிபயிற்றிக் "கண்ணை இமைகாப்பதுபோல்,, வெகுசாக்கிரதையாகப் பாதுகாப்பதிலும், ஆறுதலான நேரங்களில் வீண்கதைகள்பேசாது புண்ணிய நூல்களைவாசித்தல் கேட்டல்களிலும் காலம் போக்குவர்; அடங்காமாரிகளாகிய அதமஸ்திரீகளோ, எந்நேரமும் மாமி மைத்துனிகளோடு, "வல்லடிவழக்குச் சொல்லடிமாமி, என்று வம்பளப்பதிலும், அண்டைவீட்டுப் பெண்களோடு அற்பகாரியங்களில் குரோதங்கொண்டு, சரமாரியாகத் துஷ்டவார்த்தைகள் பேசி மண்பிடிமயிர்பிடி யென்று சண்டையிடுவதிலும், புருஷன்வேலைத் தலத்திலிருந்து மிக்கபசிக்களையோடு வந்தால், அவருடைய களையைமாற்ற நினையாது, அடுத்தவீட்டுத் தனவந்தனுடைய பெண்கள் அணிந்திருப்பது போன்ற ஆபரணங்கள் சேலைகள் தனக்கும் வாங்கித் தரவில்லையென்று, "சடைநாயைத் தெள்ளரிப்பதுபோல்,, அவருடையமனம் புண்படும்படி புறணிபேசுவதிலும், வீட்டுவெளி வாசலிலேநின்று தெருவில்செல்லும் வனப்புள்ள வாலிபரைப்பார்ப்பதிலும், அடுத்தவீட்டுத் துட்டப்பெண்களோடிருந்து, ஊரிலேகள்ளப்பிள்ளைவாங்கின வளுடையகதை, தன்னுடைய எண்ணத்துக்கு ஒருவனோடு ஓடிப்போனவளுடையகதை, களவிலே பிரசவித்த பிள்ளையை ஒருவருமறியாது குழிவெட்டிப் புதைத்தகதை இவைபோன்ற துன்மார்க்கமான கதைகள்பேசிச் சிரித்து விளையாடுவதிலுங் காலம்போக்குவர். (வரும்).

இங்ஙனம்,
க. வைத்தியலிங்கபிள்ளை,
வண்ணைநகர்.

உலகத்திற்கு நன்மை பயப்பது எது?

அஹிம்சையே.

ஸ்ரீமான் ட்ருபியர்சனின் அநுபவம்.

அமெரிக்காவிலுள்ள பிலடெல்பியா சர்வகலாசாலையைச் சேர்ந்த ஸ்ரீமான் ட்ருபியர்சன் என்பார் சமீபத்தில் சபர்மதி ஆசிரமத்திற்கு வந்திருந்தார். இவர் காந்தியடிகளையும் அவருடைய சிஷ்யர்களையும் காணவேண்டுமென்று ஆவல்கொண்டு வந்தார். இவர் காந்தி நிகேதனத்திற்குச்சென்றுவிட்டு அங்கிருந்து லாகூர் அமிருதசரஸ் முதலிய இடங்களுக்குப் போய் அங்கிருந்து நேரே சபர்மதி ஆசிரமத்திற்கு வந்திருக்கிறார். இவர் ஒருநாள் ஆசிரம வாசிகளுக்குச் செய்த உபந்நியாசத்தின் சாரம் வருமாறு:—

நான் உங்களுக்கு உபதேசஞ் செய்ய இங்கு வரவில்லை; உங்களிடமிருந்து கற்றுக்கொண்டு போகவே வந்தேன். அவுஸ்திரேலியா நியூசீலந்து சைபீரியா ஜப்பான் சைனா முதலிய இடங்களுக்குச் சென்றுவிட்டுப் பிறகே இந்தியாவுக்கு வந்திருக்கிறேன். நான் எங்குச் சென்றாலும், அங்கெல்லாம் மகாத்துமாவைப்பற்றிய பேச்சு இருந்துகொண்டேயிருக்கிறது. அவரைப்பற்றி நான் அதிகமாகக் கேள்விப்பட்டிருக்கிறதினால் மட்டும் நான் இங்கு வரவில்லை, என்னுடைய மதமும் அஹிம்சைமதமே. அஹிம்சையை மதமாகக்கொண்ட ஒரு சங்கத்தில் நான் அங்கத்தவன். 'அன்பர் சங்கம்' என்று சங்கத்திற்குப் பெயர். பதினெட்டாம் நூற்றாண்டில் நாங்கள் பலவித கொடுமைகளுக்குட் படுத்தப்பட்டோம். எங்கள் சங்கத்தின் நோக்கம் உலகத்தில் சமாதானத்தை ஏற்படுத்துவது. அஹிம்சையைப் பரப்புவது. சமூகத் துவேஷத்தை ஒழிப்பது ஆகியஇவைகளாம். நீக்ரோ அடிமை வியாபாரத்தினால் அமெரிக்காவைப் பலர் பழித்தனர். அக்காலத்தில் நீக்ரோவர்களின் துன்பத்தை ஒழிக்க நாங்கள் பெரும் பாடுபட்டோம். அவர்களில் அநேகரை இரகசியமான வழியாகக் கனடாவுக்கு அனுப்

அச் சென்றோம். சென்ற ஐரோப்பிய யுத்த காலத்தில் எங்களிற் பலர் யுத்தத்திற் சேர மறுத்தோம். அதற்காக நாங்கள் சிறைவாசத்தை அநுபவித்தோம். எங்களிற் சிலர் ஹிம்சை சம்பந்தப்படாத சில வேலைகளை யுத்தகாலத்தில் செய்தோம், உதாரணமாக ஆஸ்பத்திரிகளில் நாங்கள் ஊழியஞ் செய்தோம். உடற்குறை ஏற்பட்டவர்களுக்கு உபகாரஞ் செய்தோம்; இதற்காக நான் எங்கள் சங்கத்தால் செர்வியாவிற்கு அனுப்பப்பட்டேன். அங்கே யுத்தத்தால் நாசமடைந்த வீடுகளைப் புதுப்பிப்பது எங்களுடைய வேலை. அங்குள்ள சாதாரண சனங்கள் யுத்தத்தையே வெறுத்தார்கள். அங்கு நடந்த ஒரு சம்பவத்தை இங்கு உங்களுக்குக் குறிப்பிடுகின்றேன்.

நான் ஒரு சிறிய கிராமத்தில் வேலைசெய்து கொண்டிருந்தேன். றெயில்வேக்கு இது சிறிது தொலைவாக இருந்தது. இங்கு முன்னர் இருநூறு வீடுகள் இருந்தன. பிறகு யுத்தத்தினால் அழிந்தனபோக இரண்டுவீடுகளே பாக்கியிருந்தன. இந்தவீடுகளைப் புதுப்பிப்பதில் நாங்கள் உதவி செய்யவேண்டியதாயிற்று. எங்களுடைய வேலையில் சில பல்கேரிய கைதிகள் உதவி செய்தார்கள். நாங்கள் செய்யவேண்டிய வேலை ஒரு மலைமீதிருந்தமையால், சேர்விய காவற்காரர்கள் இந்தப் பல்கேரிய கைதிகளைக் காவல் செய்துகொண்டிருக்க முடியவில்லை. அங்கே ஒரு விதவை இருந்தாள். இவளுடைய கணவன் யுத்தத்தில் இறந்துவிட்டான். இவளுக்குச் சில குழந்தைகள் உண்டு. இந்தக்குழந்தைகளே அந்தச் சிறையாளருக்குக் காவலாளிகளாக இருந்தார்கள். இந்தப் பல்கேரிய போர்வீரர் எவ்விதத்திலும் தப்பித்துக்கொள்ள முயலாமல், இந்த விதவையின் மேற்பார்வையில் வேலை செய்துவந்தார்கள். நாங்கள் வேலைசெய்துவந்த இந்த மலைப்பிரதேசத்திலிருந்து கீழே இறங்கிச் செல்லவேண்டுமானால் காலில் பூட்சில்லாமல் முடியாது. ஆகலின், தாங்கள் தப்பித்துக்கொள்ளப்போவதில்லை யென்பதற்கு அடையாளமாக இந்தப் போர்வீரர் சாயந்திரம் வேலையானதும் தங்களுடைய பூட்சுகளைக் கழற்றி அந்த விதவையிடம் ஒப்புவித்து விடுவார்கள். இவர்களில் சுமார் ஆறு பேர் சேர்ந்து, இந்த விதவையை ஏமாற்றிவிட்டுத் தங்களுடைய பூட்சுகளை எடுத்துக்கொண்டு ஓடிப்போக முடியாதென்று நீங்கள் நினைக்கிறீர்களா? அவர்கள் அங்ஙனஞ் செய்யவில்லை. அந்த விதவையிடம் அவர்கள் அதிக விசுவாசம் பூண்டிருந்தார்கள். மாலைக்காலத்தில் சேர்விய காவலாளிகளும் பல்கேரிய கைதிகளும் ஒன்றுசேர்ந்து உல்லாசமாயிருப்பார்கள். சிலகாலங் கழித்து, இவர்களுடன் சில அல்பேனிய சோல்ஜர்களும் வந்திருந்தார்கள். சேர்வியர்களையும் பல்கேரியர்களையும் கண்டால் அல்பேனியர்களுக்கு அதிக வெறுப்பு உண்டு. ஆனால் இவர்கள் இந்த இடத்திற்கு வந்ததும் அதிக நண்பர்களாகிவிட்டார்கள். இவர்கள் ஒருவர்க்கொருவர் சிலகாலத்திற்கு முன் சுட்டும் கொன்றும் இருந்தார்கள். ஆனால் இந்த இடத்திற்கு வந்ததும் இவர்கள் அதிக நட்பாளர்களாக இருந்தார்கள். இவர்கள் அடிக்கடி ஒன்றுகூடிச் சந்தோஷமாகப் பேசிக்கொண்டிருப்பார்கள். எதைப்பற்றி? யுத்தத்தை எப்படி நிறுத்துவதென்பதைப் பற்றியே இவர்களுடைய பேச்சு. இவர்கள் ஒவ்வொருவருந் தத்தமது அரசாங்கத்தைக் கண்டித்துப் பேசிக்கொண்டிருப்பார்கள். இவர்கள், அரசாங்க நிருவாகம், தொழிலாளிகளிடத்தும் அல்லது விவசாயிகளிடத்திலுமே இருக்கவேண்டுமென்று பேசிக்கொண்டிருப்பார்கள். இவர்கள் தவிர, வெளியார் எல்லாரும் யுத்தத்தை வெறுத்தனர். ஹோட்டல்களிற்கூட யுத்தத்தை நிறுத்தவேண்டுமென்று பெரிய பிரசுரங்கள் ஒட்டப்பட்டிருந்தன.

பிறகு நான் சைபீரியாவுக்குச் சென்றேன். அங்கே சைபீரியர்கள் ஜப்பானியர்களை வெறுத்தார்கள். பிறகு நான் ஜப்பானுக்குச் சென்றேன். அங்கு சைபீரியாவைப்பற்றி என்னுடைய அபிப்பிராயம் என்னவென்பதை ஒருஉபந்யாச மூலம் தெரிவிக்கும்படி கேட்டுக்கொள்ளப்பட்டேன். ஜப்பான் அரசாங்கத்தைச் சைபீரியர்கள் மனமார வெறுக்கிறார்கள் என்று நான் கண்டதைக் கண்டபடிகூறினேன். ஜனங்கள் என் வார்த்தையைச் சாவதானத்துடன் கேட்டு, பிறகு தங்கள் (ஜப்பான) அரசாங்கத்தின் அந்நியநாட்டுக் கொள்கையைக் கண்டித்தார்கள். பிறகு இவர்களுடைய முயற்சியாலேயே சைபீரியாவிலிருந்த ஜப்பானிய இராணுவம் திரும்ப அழைத்துக்கொள்ளப்பட்டது.

பிறகு சைனாவுக்குச் சென்றேன். அங்கும் காந்தியைப்பற்றி நான் கேள்விப்பட்டேன். ஸ்ரீமகக் ரீ என்ற கிறிஸ்தவ பணக்காரர் காந்தியின் சீடராக விளங்குகிறார். நான் அங்குச் சென்ற சமயத்தில் சீன மாலுமிகள் வேலைநிறுத்தஞ் செய்திருந்தார்கள். இவர்கள், தங்களில் ஒருவருக்கும் றெயில்வே டிக்கட்டுக் கொடுக்கக்கூடாதென்று தடுத்துவிட்டுக் கால்நடையாகச் சென்றார்கள். சீன எல்லையும் பிரிட்டிஷ் எல்லையும் சந்திக்குமிடத்தில் பிரிட்டிஷ் போர்வீரர் ஆயுதபாணிகளாய் நின்றிருந்தார்கள். வேலைநிறுத்தக்காரர்கள் அந்த எல்லைக்குள் வந்ததும், பிருட்டிஷ் வீரர்கள் அவர்கள்மீது துப்பாக்கிப்பிரயோகஞ் செய்தார்கள். உடனே இஃது எங்கும் பரவிற்று. சீனர்கள் எல்லாரும் எல்லாத் தொழிலாளரும் வேலைநிறுத்தஞ் செய்துவிட்டார்கள். வண்டிக்காரர்கள், வண்ணார்கள், ஐரோப்பியர்வீட்டில் வேலைசெய்யும் வேலைக்காரர்கள் ஆகிய எல்லாரும் வேலைநிறுத்தஞ் செய்துவிட்டார்கள். உடனே பிரிட்டிஷார் இணங்கிவிட்டார்கள். சீன மாலுமிகளுக்கு நூற்றுக்கு முப்பது வீதம் சம்பள உயர்வு கொடுக்கப்பட்டது. இங்ஙனமே பல உதாரணங்கள் இருக்கின்றன. சைனாதேசத்தில் அநேகவிதமான குழப்பங்கள் உண்டானதாக நீங்கள் கேள்விப்படலாம். ஆனால் சீனர்கள் தங்களுடையகுறைகளை நிவர்த்தித்துக்கொள்ளவேண்டுமானால் சாத்துவிக எதிர்ப்பினாற்றான் முடியுமென்பதை உணர்ந்துகொண்டிருக்கிறார்கள்.

உலகத்தில் சமாதானம் ஏற்படுவதற்கு நீங்கள் என்னென்ன முறைகளைக் கையாளுகிறீர்களோ அந்த முறைகளை உலகத்தார் ஒவ்வொருவராக அநுஷ்டித்து வருகின்றனர். நான் சென்றவிடங்களில் சமூகப் பகைமை அதிகமாகப் பாராட்டப்படுகிறது. முக்கியமாக ஆஸ்திரேலியாவிலும் நியுஜிலந்திலும் இந்தப் பகைமை மிக அதிகமாயிருக்கிறது. உலகத்தை நன்னிலைக்குக் கொண்டுவரவேண்டுமானால் அது சண்டையினால் முடியாது. அஹிம்சையினாற்றான் முடியும். —நவசக்தி.

விளம்பரம்.

தேக்கமரம்.

திறமான பர்மாதேச தேக்கமரத் தீராந்திகள். நீளம், 10 அடி தொடக்கம் 35 அடி வரையிலுள்ளன. கனம் 12 அங்குலக் தொடக்கம் 18 அங்குலம் வரையிலுள்ளன. இவைகள் எம்மிடத்தில் விலைக்குக் கிடைக்கும்.

S. வீரகத்திப்பிள்ளை,
(H. 16.) தொண்டமானாறு.

விற்பனவு விளம்பரம்.

(1) திறமான முருகைக்கல்லுச் சுண்ணம்பு முன்விலையிலும் ரூபா 2 குறைத்து இலாஸ்தர் ஒன்று (புசலளவு) 17 ரூபாவாகவும், (கடக அளவு) 14 ரூபாவாகவும் இந்தமாசம் முடியும் வரையில் விற்கப்படும். மேலும்,

(2) செம்மணி வெளியிலுள்ள 4 துண்டு வயல்நிலங்களும், (அவை முறையே 110¾; 25; 28; 12 பரப்புகளுள்ளன.) (3) நாயன்மார்கட்டு வைத்தியசாலைக்கு முன்பாக 2 அறைகளிலுள்ள கல்வீடும் 12½ பரப்பு நிலமும், (4) 3 அறைகளிலுள்ள மெத்தைவீடும் 4½ பரப்பு நிலமும் விற்பனவுக்கு இருக்கின்றன.

நா. சி. பெருமாட்பிள்ளை,
(Mis. 394) புடைவை வியாபாரம், நல்லூர்

உலகமெங்கும் புகழ்பெற்ற மருந்துகள்.

மன்மத கோலாகலக் குளிகை.

இது ஒன்றே திவ்விய அவுஷதம்! மகா அருமையானது!! ஆச்சரியமான குணமுள்ளது!!!

இது புஷ்டிக்கு நிகரற்ற மருந்து. இதற்குச் சமமான தொன்றுமில்லை. ஒரே குளிகையில் பரீக்ஷிக்கலாம். ஜீரணம், இரத்தவிர்த்தி, இந்திரியக்கட்டு, புஷ்டி உண்டாகும். எவ்வித பலஹீனம், நரம்புத்தளர்ச்சி, சக்திக்குறைவு, இடுப்புவலி நீங்கும். இழந்த பலமும், ஆண்மையும் திரும்ப உண்டாகும். இல்வாழ்வில் இன்பத்தையும் உற்சாகத்தையும் கொடுக்கும். உத்தரவாதமுள்ளது. 120 குளிகை ரூபா 10. 60 குளிகைக்கு ரூபா 5. 30 குளிகை ரூபா 3. மாதிரிக்கு 20 குளிகை ரூபா 2.

மூலத்திற்கு குருநாகபஸ்பம்

ஆப்ரேஷன் அவசியமில்லை; முளை தானே கரையும்; கீழ்மூலம், இரத்தமூலம், குத்தல், மூலமுளை, மலபந்தம் முதலியமூலம் ஒன்பதும் அதிசீக்கிரம் குணமாகும். உத்தரவாத முள்ள சிறந்த அவுஷதம். புட்டி ஒன்றுக்கு ரூபா 4.

இருமலுக்கு குருதாளக பஸ்பம்.

காசம், க்ஷயம், சளி, இளைப்பு, இருமல், சுவாசம், கோளை, கபக்கட்டு இவைகள் எவ்வளவுநாட்பட்டதாயிருந்தாலும் சீக்கிரம் தீரும்; எட்டுவித காசமும் தீரும். புட்டி ரூபா 4.

பிரமேக நிவாரணி

வெள்ளை, வெட்டை, தந்திமேகம், நீர்க்கடுப்பு, குத்து உடனே நிற்கும்; மூன்றுவேளையில் குணமாகும்; தவறாது. மிக்க அநுபவமானது. புட்டி ரூபா 2.

மாந்திரீக சத்து.

இதை அணிந்துகொண்டால் சகல வசியம், தன லாபம், நினைத்தகாரியசித்தி, தொழிலபிவிர்த்தி, புத்திரசந்தானம், தெய்வதுணை உண்டாகும்; செய்வினை, பேய் பிசாசு நீங்கும். சத்து 1-க்கு ரூபா 2, 6 சத்துகள் ரூபா 10.

பரம்பரையும் அநேக பரிசுகள்
மெடல்கள் பெற்ற
C மலையப்பசாமிபிள்ளை,
நித்தியானந்த மெடிக்கல் ஹால்,
(H. 19). பழனி. S. I.

BISHAW NATH OIL
Kishori Lall Khetris
TRADE MARK
বিশ্বনাথ তৈল
विश्वनाथ तेल
दाम फि शिशि एक रुपेया
BISHAW NATH OIL
PRICE 1 R.S PER PHIAL.
89 BEADON STREET.
CALCUTTA.

உலகப் பிரசித்திபெற்ற

விஸ்வநாத தைலம்.

இது சுத்தமான நல்லெண்ணெயிலிருந்தே தயாரிக்கப்பட்டுள்ளது. இதன் சுகந்தம் அன்றலர்ந்த ரோசாப் பூவின் சுகந்தத்தை யொத்து ஒருமுறை வைத்தால் நான்கு நாட்களுக்குப் பரிமளித்துக்கொண்டிருக்கும். விசுவநாத தைலம் போன்ற சுத்தமானதும் வாசனையுள்ளதுமான எண்ணெய் உலகத்தில் வேறொன்றுமில்லை என்று சொல்லலாம். இதன் வாசனை மனசிற்கு ஒருவிதமான கிளர்ச்சியைத் தரும். கேசத்தைப் பெலப்படுத்துவதிலும் வளரச் செய்வதிலும் உதிராவண்ணம் பாதுகாத்துக்கொள்வதிலும் அகாலத்தில் நரை வராவண்ணந் தடுப்பதிலும் விசுவநாததைலம் சமானமற்றதாகும். வெண்தலையாதல், கிறுதி, ஞாபகக் குறைவு, தலைவலி முதலிய ரோகங்களை இத்தைலம் அற்புதமாக மாற்றிவிடு மியல்புடையது. உடம்பின் மேற்புறத்து உண்டாகும் எவ்வகையான ரோகங்களையும் இது மாற்றவல்லது.

மூன்று சீசாவிற்குக் குறைய வெளியூர்களுக்கு அனுப்பப்படா.

3 சீசாவின் விலை ரூபா 3 அணா 9.
6 ,, ,, 6 ,, 6.
1டசின் ,, ,, 11 ,, 8.

தபாற் செலவும் இதற்குள் அடங்கும்.

தாமகு ரஞ்ஜன்.
(TAMAKU RANJAN.)

KISHORI LAL KHETRI

குடி புகையிலையோடு ஒரு கிறெயின் தாமகு ரஞ்ஜனைக் கலந்துவிட்டுக் குடித்தால் அது மனோகரமான சுகந்தத்தைத் தரும். அதுவுமன்றித் திறமான புகையிலையை வாங்கி உபயோகிக்கவேண்டிய ஆவசியகமுமில்லை. தாமகு ரஞ்ஜன், கஸ்தூரி கொண்டும் மற்றும் மருந்து மூலிகள் கொண்டுந் தயாரிக்கப்படுதலால் சகலவித பல் வியாதிகளையும், இருமல் தடிமல் முதலிய ரோகங்களையும் சொஸ்தமாக்கவல்லது. இது ஆண்மையையும் மனக்கிளர்ச்சியையும் ஆக்கவல்லது.

விலை: டப்பி 1 அணா 8. ஒரு டசின் டப்பிகள் தபாற்செலவுட்பட ரூபா 4 அணா13.

விலாசம்:—

KISHORI LAL KHETRI,
89 BEADON St. CALCUTTA.
கிஷோரி லால் காயத்கிரி,
89. பீடொன் தெரு, கல்கத்தா.
(Y. 23).

[ESTABLISHED 1909].

MESSRS. A. S. M. A. KHADER BROTHERS
Kairul Muslimeen Medical Hall
PORTONOVO (*SouthArcotDistrict*).

வீண் ஆரவாரமான விளம்பரங்களைக் கண்டு மிரண்டுவிடாதீர்கள்.

அடியிற் கண்ட லேகியத்திற்காக ரூபா **1000** இனுமளிக்கப்படும்.

இந்த லேகியம் சாப்பிட்ட 3மணி நேரத்திற்கெல்லாம் சப்த தாதுக்களின் பலத்தையும் வீரிய உற்சாக தத்துவத்தையு மடைவிக்கச் செய்யவில்லையென்றாவது பரீட்சைசெய்யும் அன்பர்களுக்கு பலனைக் கொடுக்கவில்லையென்றாவது கடவுளுக்குப் பொதுவாய் சொல்லுகிறவர்களின் பணத்தை உடனே வாபஸ் கொடுத்துவிடப்படும்.

அசல் பாகம் சந்தோஷிக்கச் செய்வது

உத்திரவாதமுள்ளது.

சித்தஜானந்த சிட்டுக்குருவி லேகியம்.

இந்த லேகியம் முற்காலத்து மன்னர்களால் உபயோகித்து வீரியசக்தி குறைபாது இல்லா இன்பவாழ்க்கையை யடைந்து புத்திர பவுத்திர சம்பன்னராய் நீடூழி வாழும்பொருட்டே நமது முன்னோர்களால் கூறப்பட்ட பழைய ஏட்டுப்பிரதிகளிலுள்ள ஒளஷத பாகங்களிற் சிறந்ததும், இரத்தவிர்த்தி, வீரியவிர்த்தி, அறிவுவிர்த்தி, சந்தானவிர்த்தி முதலிய நலன்களை அடையக்கூடியதுமான ஓர் புருஷசஞ்சீவியாகின்றது. மற்ற விபரங்களை நமது கேட்லாக்கில் காணலாம்.

லேகியத்தின் முக்கிய குணமாவது

வாத பித்த சிலேத்ம விருதி குறைவால் ஏற்படும் இரத்தக்குறைவு, ஏழுவகை தாதுக்களின் பலஹீனம், அஸ்தி வெட்டைச்சூடு, பிரமேகவெட்டை, நீர்க்கடுப்பு, நீரடைப்பு, நீர்சுருக்கு, நீர்எரிச்சல், நீர்தாரை பெருத்தல் ஆகிய நோய்களையும், நித்திரையில் அடிக்கடி உண்டாகும் தாதுநஷ்டம், நித்திரைப்பங்கம், SPERMATORRHEA, தேகமெலிவு, சதாஇடுப்புவலி, கைகாலசதி, மலச்சிக்கல், பசிமந்தம், தேகத்தில் பலவிடங்களிலும் ஓடித்திரியும் பலவித வாய்வுகள், நெஞ்சுவலி, NERVOUSDISEASES, ஆகிய நோய்களை சுகப்படுத்தி, புதியமேனியுடன் இரத்தவிர்த்தி, வீரியவிர்த்தி, சந்தானவிர்த்தி முதலிய நலன்களைப் பெறுவதில் இதைவிடச் சிறந்த மருந்து கிடைப்பது அரிதினுமரிது. இச்சிறந்த அபூர்வலேகியத்தின் ஆச்சரிய குணத்தை உடனேக்குடன் அறியவேண்டியதென்றே ஜனனுகூல நன்மைக்காகவே இதனை மிகவுங் குறைந்த விலைக்கு வெளியிட்டிருக்கின்றோம்.

40 நாள் சாப்பிடும் பெரியடப்பி 1-க்கு விலை ரூபா 8—0—0.
20 நாள் சாப்பிடும் சிறியடப்பி 1-க்கு விலை ரூபா 4—0—0.

வி. பி. தபால் செலவு பிரத்தியேகம்

முற்பணமனுப்பினால் V. P. தபால்செலவு இனும். பினங்கு, சிங்கப்பூர், கிள்ளான், கோலாலம்பூர், பேரா முதலிய பிறதேசவாசகர்கள் மருந்தின் கிரயமும், தபால்சார்ஜு ரூபா 2ம் சேர்த்து முற்பணமனுப்பி மருந்து பெறவேண்டும். ஷையூர்களுக்கு வி. பி. யில் அனுப்பப்படமாட்டாது.

இச்சிறந்த லேகியமானது சிட்டுக்குருவியின் இருதம் அதாவது ஷைகுருவியின் சத்தால் செய்யப்படவில்லையென்றாவது, அல்லது இந்த லேகியத்தைச் சாப்பிட்டதால் குணமொன்றுஞ் செய்யவில்லையென்றாவது கடவுளுக்குப் பொதுவாய் ருபிப்பவர்களுக்கு அவர்கள் கொடுத்த மருந்தின் கிரயத்தையும் ரூபா 1000 இனுமாயும் கொடுக்கப்படும். அப்படி ருபித்தும் இனுமுடையப்பணத்தை கொடுபடாவிட்டால் கோட்டுமூலமாக வசூல்செய்துகொள்ளலாம். அதன்றியும் மற்றக் கம்பெனியாரின் இத்தகையான குருவிலேகியங்களுக்கு இப்படிப்பட்ட ஆச்சரிய குணமுண்டென்றாவது, அல்லது இச்சிறந்த குண பாக லேகியத்தை செய்து காட்டினாலாவது முன் கண்ட இனும் கொடுக்கப்படுமென்பதற்கு உத்திரவாதமளிக்கப்படும்.

Telegraphic Address:
Khader Brothers
Porto-Novo.
(Y. 19).

என்மேல்விலாசம்:—
மெஸ்ஸர்ஸ் ஏ. எஸ். எம். ஏ. காதர் பிரதர்ஸ்,
கைறுல் முஸ்லிமீன் வைத்தியசாலை,
பறங்கிப்பேட்டை தென்னாற்காடு ஜில்லா.

வான்முகில் வழாது பெய்க மலிவளஞ் சுரக்க மன்னன், கோன்முறை யரசுசெய்க குறைவிலா துயிர்கள் வாழ்க, நான்மறை யறங்க ளோங்க நற்றவம் வேள்விமல்க, மேன்மைகொள் சைவநீதி விளங்குக வுலக மெல்லாம்.

Printed and Published by S. Ampikaipagan, for the Proprietors at the Saiva Prakasa Press, Jaffna.